**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 232 of 2016**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : சுதந்திர ராஜா** | **Father/Husband's Name : பழனிச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 06.07.2026.**

**A1 to A5, A7 to A10 present. A6 Split up.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பழனி தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 லால் பாட்ஷா தற்போது உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் உள்ளார். கடந்த 2015ம் வருடம் ஆயக்குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 20.09.2015ம் தேதி காலை 10.15 மணிக்கு நானும், லால்பாட்ஷா என்பவரும் சார்பு ஆய்வாளர் ஜெயபாண்டி என்பவருடன் விநாயகர் சிலை ஊர்வலத்தில் சிலை அனுப்புவதற்காக பாதுகாப்பிற்கு ரோந்து அலுவலில் இருந்தபோது 10.15 மணிக்கு கணக்கன்பட்டி பஸ் ஸ்டாப் அருகே இரண்டு டிராக்டர்களில் கஞ்சநாயக்கன்பட்டியை சேர்ந்த ராஜேந்திரன், முருகன், சேகர், கோவிந்தராஜ், கார்த்திக் ஆகியோர்கள் TN 57 7286 என்ற டிராக்டரிலும், மற்றொரு டிராக்டரான TN 30 T 5128 என்ற வாகனத்தில் விக்ரம், மயில்சாமி, சுரேஷ், முத்துச்சாமி, கருப்புச்சாமி ஆகியோர்கள் அதிக ஆட்களை ஏற்றி கொண்டு பொதுசாலையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக முரட்டுதனமாகவும், வேகமாகவும் ஓட்டி வந்த ஓட்டுநர்களை நிறுத்தி வாகனத்தை தணிக்கை செய்ய கேட்டபோது தணிக்கைக்கு சான்றிதழ்களை தரமறுத்தபோது சார்பு ஆய்வாளரை பணி செய்யவிடாமல் தடுத்தற்காக எச்சரித்த பின்பும் மீண்டும் அதே செயலை செய்ததால் மீண்டும் அன்றே நிலையம் வந்து 11.15 மணிக்கு நிலைய குற்ற எண்.295/2015 ஆக வழக்கு பதிவு செய்தார். வழக்கு பதிவு செய்வதற்கு உதவியாக நானும், லால் பாட்ஷாவும் உடன் இருந்தோம். ஆஜர் எதிரிகள் தான் சம்பவயிடத்தில் வாகனத்தை

முரட்டுதனமாக ஓட்டி வந்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினார்கள். TN 57 7286 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்டி வந்த நபர் ராஜேந்திரன். TN 30 T 5128 என்ற வாகனத்தை ஓட்டி வந்த நபர் மயில்சாமி. சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. ஆஜர் எதிரிகளில் யார் முத்துச்சாமி என்றால் இரண்டாவதாக கண்ணாடி அணிந்திருக்கும் நபர் முத்துச்சாமி(2வதாக முருகன் என்ற எதிரி நின்றிருந்தார்). இந்த வழக்கில் எத்தனை பேர் ஈடுபட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் 10 பேர். சிலையை எங்கே வைத்திருந்தார்கள் என்றால் கஞ்சநாயக்கன்பட்டியில் வைத்திருந்தார்கள், சம்பவம் நடந்த இடம் கணக்கன்பட்டி பஸ் ஸ்டாப் அருகில். என்ன சம்பவம் நடந்தது என்றால் நாங்கள் ரோந்து போய் கொண்டிருக்கும்போது சிலையுடன் ஆட்களை ஏற்றி கொண்டு வந்தார்கள், நாங்கள் அந்த வாகனத்தை நிறுத்தி, இவ்வாறு வாகனம் ஓட்ட கூடாது என்று சொன்னோம், ஓட்டுநரிடம் ஆவணம் கேட்டோம். ஆவணத்தை கொடுக்கவிடாமல் எல்லா எதிரிகளும் வாக்குவாதம் பண்ணுவதுபோல் வந்தார்கள். இரண்டு டிராக்டர்கள் சொல்லியுள்ள நிலையில் எத்தனை பேர் வண்டிக்கு உள் இருந்தார்கள் என்றால் எத்தனை பேர் இருந்தார்கள் என்று தெரியவில்லை. எதற்காக வாகனங்களை நிறுத்தினோம் என்றால் சிலைகளையும் வைத்து கொண்டு, ஆட்களையும் வைத்து கொண்டு இடைஞ்சலாக ஓட்டி வந்ததால் நிறுத்தினோம். அன்றைய தேதியில் அனைத்து விநாயகர் சிலைகளையும் பழனி பாதவிநாயகர் கோவிலில் இருந்து ஊர்வலம் செல்வதற்கு அனுமதித்து இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் வண்டி தான் வந்தது என்றாலும் வேறு எதுவும் செய்யவில்லை என்றாலும் விபத்து ஏற்படும் அளவில் ஓட்டியதால் வண்டியை நிறுத்தினோம். விபத்து எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். அந்த இரண்டு வாகனங்களையும் RTOவிடம் அல்லது நீதிமன்றத்தில் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. நான் சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் எத்தனை மணிக்கு சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அன்று காலை 11.15 மணிக்கு பதிவு செய்தோம். அன்றைய தேதியில் விநாயகர் ஊர்வலம் நடந்ததால் எல்லோரும் வெளியிடத்தில் பணியில் இருந்துவிட்டு மேற்சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம் என்று பொய்யாக சொன்னோம்

என்றால் சரியல்ல. பொதுமக்களுக்கு என்ன இடைஞ்சல் செய்தார்கள் என்றால் அங்கு நின்றிருந்த மக்களுக்கு மற்ற வாகனங்களுக்கு பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்தவர்களுக்கு இடைஞ்சல் செய்யும் வகையில் ஓட்டினார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் நாலு ரோடு சந்திக்கும் பகுதி என்றால் சரிதான். பிரதான சாலையின் இரண்டு பக்கமும் பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான். இடைஞ்சல் செய்ததாக பொதுமக்கள் யாரும் புகார் செய்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் சிலை எதையும் வைத்து கொண்டு நான் சொல்லும் நேரத்தில் வரவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் 11.00 மணிக்கு தான் கிளம்ப வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தல் இருந்ததால் 11.00 மணிக்கு தான் கஞ்சநாயக்கன்பட்டியில் இருந்து டிராக்டரில் கிளம்பினார்கள் என்றால் சரியல்ல. 1 மணிக்கு ஊர்வலம் ஆரம்பிக்க இருந்ததால் 11.00 மணிக்கு தான் கஞ்சநாயக்கன்பட்டியில் இருந்து கிளம்பினார்கள் என்றால் சரியல்ல. விநாயகர் ஊர்வலம் நடக்கும்போது முதல் நாளில் வரும் வாகனங்கள் மீது பொய் வழக்கை போட்டு பின் நாளில் வரும் வாகனங்களை மிரட்டுவதற்காக இவ்வாறு பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் 6வது எதிரிக்கு மாண்பமை உயர்நீதிமன்றம் வழக்கை ரத்து செய்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும், பட்டியல் சாட்சி 1ம், சார்பு ஆய்வாளர் ஜெயபாண்டி என்பவரும் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் இல்லை என்றாலும் எதிரிகள் வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வரவில்லை என்றாலும், எதிரிகள் வாகனத்தில் அதிகப்படியான ஆட்களை ஏற்றிவரவில்லை என்றாலும் பொதுமக்களுக்கு எந்தவித இடைஞ்சலும் ஏற்படுத்தவில்லை என்றாலும் நடக்காத சம்பவத்திற்கு காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் வாகனங்களை கைப்பற்றியிருப்போம் என்றால் சம்பவம் நடந்தது, வாகனங்கள் கைப்பற்றப்படவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரிகள் குற்றமற்றவர்கள் என்றாலும் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.06 18:03:20 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.